**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 20–ம்** தேதி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடலூர், நீலகிரி மாவட்டம். **அசல் வழக்கு எண்.9/2019** 1973ஆம் ஆண்டு ஆணையுறுதி ஆவணச் சட்டம் 10–வது விதியின் படி திருமதி. A.மகேஸ்வரி, தலைமை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **திரு. பாலாஜி(DW -1)** | கிராமம் | : |
| தந்தை பெயர் | : திரு.S.நாகசாமி | தாலூக்கா | : |
| ஜாதி | : – | மாவட்டம் | : நீலகிரி |
| தொழில் | : Forest Range Officer, Kargudi. | வயது | : 38/2026 |

---

**20.02.2026**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**பி.வா.சா.1–ன் முதல் விசாரணை சாட்சியம்**

நான் இவ்வழக்கின் 3–ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் வனசரகராக பணியாற்றி வருகிறேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்கு மூலமாக எழுத்து மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பி.வா.சா.ஆ.1 –** 18.02.2019ஆம் தேதியிட்ட சட்ட அறிவிப்பு.

**பி.வா.சா.ஆ.2 –** 03.09.2019ஆம் தேதியிட்ட கூடலூர் தாசில்தார் வழங்கிய கடிதம் அசல்.

**பி.வா.சா.ஆ.3 –** 03.09.2019ஆம் தேதியிட்ட கூடலூர் தாசில்தார் வழங்கிய அடங்கல் பதிவேடு உண்மை நகல்.

**பி.வா.சா.ஆ.4 –** புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு.

MURUGESAN P

Digitally signed by MURUGESAN P
Date: 2026.02.20 16:30:13 +0530

**(பி.வா.சா.ஆ.4 சான்றாவணம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65B–ன் கீழ் சான்றிதழுடன் குறியீடு செய்யாததால், வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. அதனால், பி.வா.சா.ஆ.4 சான்றாவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.)**

வாதி தரப்பு வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

MURUGESAN P

Digitally signed by MURUGESAN P
Date: 2026.02.20 16:30:17 +0530